இயல் - 1

# ஆய்வு அறிமுகம்

# 1. ஆய்வு அறிமுகம்

## 1.0 முன்னுரை

இக்கால இலக்கிய வரலாற்றில் கலைஞர் கருணாநிதியின் பங்கும் பணியும் குறிப்பிடத்தக்கது. கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், உரையாடல், உரை, உரைநடை, தலையங்கம், கடித இலக்கியம், தன் வரலாற்று இலக்கியம் எனப் பல்வேறு இலக்கியத் துறைகளிலும் கலைஞர் சிறந்து விளங்குகிறார். எழிலார் தமிழெடுத்து எண்ணத்தை எழுத்து வண்ணமாக்குவதில் தேர்ந்தவர் கலைஞர். இவர் எழுத்தக்களில் காணும் துள்ளும் கவிதை ஓட்டமும் நெஞ்சை அள்ளும் ஓசை நயமும், எழுத்தும் தமிழ்ச் சொல்லழகும், தங்கு தடையற்ற கருத்து வளமும் கன்னித் தமிழ் நடையழகும் எவரையும் கவரவல்லன, கலைஞரின் எழுத்தால் ஈர்க்கப்பட்டோர் எண்ணற்றோர். கலைஞரின் உரைநடை நூல்களில் காணும் கருத்துப் புலப்பாட்டு நெறியைத் தனித்து விரிவாக ஆராயும்போது அவரின் ஆளுமைத் திறனையும், எழுத்தாற்றலையும் முழுமையாக அறிய முடியும்.

## 1.1 ஆய்வுத் தலைப்பு

கலைஞரின் உரைநடைத் திறனை ஆராயும் நோக்கில் 'கலைஞர் மு. கருணாநிதியின் கருத்துப் புலப்பாட்டு நெறி' என்ற தலைப்பில் ஆய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளது. கலைஞரின் உரைநடை, தனித்தன்மையுடன் விளங்குவது. கலைஞர் தம் அரசியல், சமுதாய இலக்கியக் கருத்துக்களை மக்களுக்குப் புலப்படுத்த

எளிய உரைநடை உத்திகளைக் கையாண்டு வருகிறார். அழகிய உவமைகள், பழகிய சொற்கள், பாங்கான வர்ணனை, பரந்த நூலறிவு தேவையான சந்தநயம், தீந்தமிழ் நடை ஆகியன கலைஞரின் கருத்துப் புலப்பாட்டிற்குக் கவிநயம் சேர்ப்பன. எனவே கலைஞர் உரைநடை நூல்களில் காணும் புலப்பாட்டு நெறி குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 1.2 கருதுகோள்

கலைஞரின் உரை நடை நூல்கள் இலக்கிய நயத்தாலும், கவித்திறனாலும், கன்னித் தமிழ் நடையாலும், கனிவான சொல்லாலும், தனித்து விளங்குவன. அவர் நூல்களில் காணும் நடையியல் உத்திகளையும், கருத்துப் புலப்பாட்டு நெறிமுறைகளையும் ஆராய்வதே ஆய்வின் கருதுகோளாகும்.

## 1.3 சான்றாதாரங்கள்

சங்கத்தமிழுக்கும் திருக்குறளுக்கும் கலைஞர் கவிதை நடையில் உரை எழுதியுள்ளார். கலைஞரின் தன் வரலாற்று நூலான நெஞ்சுக்கு நீதி மூன்று நெடிய தொகுதிகளாக வெளிவந்துள்ளன. சங்கத்தமிழ், குறளோவியம், நெஞ்சுக்குநீதி ஆகிய நூல்கள் ஆய்வின் முதன்மைச் சான்றாதாரங்களாகும். கட்டுரைகளும், ஆய்வு நெறியியல் குறித்த திறனாய்வு நூல்களும், தகவல்களும் ஆய்வுக்குத் துணைமை ஆதாரங்களாக அமைந்துள்ளன.

## 1.4 ஆய்வு முன்னோடிகள்

கலைஞரின் படைப்பிலக்கியம் பற்றிய ஆய்வுகளும், அவரின் தமிழ் இலக்கியப்பணி குறித்த ஆய்வுகளும் வெளிவந்துள்ளன. ஆயினும் கலைஞரின் உரைத்

திறனையும், உரை நடைத் திறனையும் உரையாடல் திறனையும் வெளிப்படுத்தும் ஆய்வுகள் அருகியே உள்ளன. கலைஞரின் உரைநடைத் திறனை வெளிக் கொணரும் நோக்கில் கலைஞரின் கருத்துப் புலப்பாட்டு நெறியை வெளிப்படுத்துவதாக அமையும் இந்த தலைப்பு புதிய முயற்சியாகும்.

## 1.5 ஆய்வின் அணுகு முறைகள்

கலைஞரின் உரைநடை நூல்களில் காணும் உவமை, உருவகம், கற்பனை, வர்ணனை போன்ற கவிநயம் மிக்க பகுதிகளை ஆராயும்போது மதிப்பீட்டுத் திறனாய்வும், கலைஞரின் ஆளுமைத் திறனையும், நடையியல் அமைப்பையும் புலப்பாட்டு நெறியையும் ஆராய மொழியியல் திறனாய்வும், உளவியல் ஆய்வும், புலப்பாட்டு நெறி ஆய்வும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 1.6 ஆய்வுப் பகுப்பு

1. ஆய்வு அறிமுகம்
2. கலைஞர் கருணாநிதியின் படைப்புகளும், ஆளுமைத் திறனும்
3. கருத்துப் புலப்பாட்டிற்குக் கவிதை உத்திகள்
4. உரைநடை உத்திகள்
5. மொழிநடை
6. முடிவுரை

ஆய்வு அறிமுகம் என்ற முதல் இயலில் ஆய்வுத் தலைப்பு விளக்கம், ஆய்வு நோக்கம், கருதுகோள், ஆய்வின் முன்னோடிகள், மொழிநடை ஆய்வின் அணுகுமுறை, சான்றாதாரங்கள், ஆய்வுப் பகுப்பு போன்ற செய்திகள் இடம் பெறுகின்றன.

கலைஞரின் படைப்புகளும், ஆளுமைத் திறனும் என்ற இரண்டாவது இயலில் நாவல்கள், நாடகங்கள், சிறுகதைகள், உரைநடை நூல்கள் எனப் பல்வேறு இலக்கிய வடிவங்களில் கலைஞர் எழுதியுள்ள நூல்களின் அறிமுகமும், இலக்கியப் பின்புலமும், நூலாசிரியரின் ஆளுமைத் திறனும் ஆராயப்பட்டுள்ளன.

கருத்துப்புலப்பாட்டு நெறிக்குக் கவிதை உத்திகள் என்ற மூன்றாவது இயலில் சங்கத்தமிழ், குறளோவியம், நெஞ்சுக்கு நீதி ஆகிய நூல்களில் காணும் உவமை, உருவகம், தலைப்புகளில் காணும் கவித்திறன், வருணனை, கற்பனை, ஓசைநயம் ஆகியன விரிவான ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அமைப்பு, உள்ளடக்கம், உத்திமுறைகள் ஆகியன புலப்பாட்டு நெறி ஆய்வு முறையில் ஆராயப்பட்டுள்ளன. கலைஞரின் கவித்திறன் உரை நடையிலும் அமைந்துள்ளது. கலைஞரின் உரை கவிதை உரையாக, உரைநடை புதுவித கவிதை உரைநடையாக விளங்குவதைச் சான்றுகளுடன் இந்த இயல் ஆராய்கிறது.

உரைநடை உத்திகள் என்ற நான்காவது இயலில் கலைஞரின் உரைநடையின் தனித்தன்மைகள், ஆராயப்பட்டள்ளன. கலைஞரின் உரை நடை பெரிதும் விளக்க நடையாகவே அமைந்துள்ளது. புதிய கதைகளை அமைத்தும், காட்சிப் பின்னணிகளை அமைத்தும், தன்வாழ்வியல் நிகழ்ச்சி பின்புலத்தை அமைத்தும் கருத்துக்களை விளக்கிச் செல்கிறார், கலைஞர். ஆர்வநிலை வளர்க்கும் விறுவிறுப்பான நடையமைப்பும், காட்சிகளை வர்ணிக்கும் வர்ணனை நடையும் உரையாடல் அமைப்பில் அமைந்த நடையும், கவிதை நடையும், உணர்ச்சி நடையும், உளப்பாட்டு நடையும் கலைஞரின் உரைநடையில் விளங்குவதை இந்த இயல் சான்றுகளுடன் மெய்ப்பிக்கிறது.

மொழிநடை என்ற ஐந்தாம் இயல் மொழியியல் ஆய்வின் அடிப்படையில் அமைந்துள்ளது. கலைஞரின் தனித்தன்மை (Originality) அவரின் மொழிநடையில் புலனாகிறது. எதுகை, மோனை, இயைந்தும், இயைபுத்தொடர் இணைந்தும், வண்ணங்களை புனைந்தும், ஒலிக்கோலமிக்க கவிதை நடையைப் பெரிதும் கையாண்டுள்ளார். கலைஞர் அரைகோடிட்டு எழுதும் புதுவித விரித்தல் தொடர்கள் கலைஞரின் தனிவகை மொழிநடையாக இருக்கிறது. காட்சிப் பின்னணியில் இடம்பெறும் பாத்திரங்களுக்கு அழகிய தமிழ்ப் பெயர்களைச் சூட்டியுள்ளார். வழக்குச் சொற்களையும், பழமொழிகளையும் கையாண்டுள்ளார். ஈடுபாட்டுடன் வாசகனையும் உளப்படுத்தி எழுதும் உணர்ச்சி நடையும் கலைஞரின் தனிநடையாக விளங்குகிறது. இத்தகு நடைகளை வகைப்படுத்திச் சான்றுகாட்டி ஆராய்கிறது இந்த இயல்.

முடிவுரை என்ற இறுதி இயலில் ஆய்வின் மெய்ம்மைகள் எடுத்துரைக்கப் பட்டுள்ளன. நிகழ்ச்சிகளைக் காட்சியாக்கி, நீரோடைத் தமிழிலும் நெஞ்சில் கனலேற்றும் முழுவோசைத் தமிழிலும், உருக்கமிகு உணர்ச்சித் தமிழிலும் தன் கருத்துக்களை எடுத்துரைக்கும் கலைஞரின் கருத்துப்புலப்பாட்டு நெறியை வெளிப்படுத்தும் முறையில் இந்த ஆய்வு அமைந்துள்ளது.

அடுத்துப் பின்னிணைப்புகள் இடம் பெற்றுள்ளன, துணை நூற்பட்டியலும் இடம் பெற்றுள்ளன.

அவை,

1. கலைஞரின் புகைப்படம்
2. சங்கத்தமிழ் - தலைப்புகளின் அகரவரிசைப்பட்டியல் (புறம்)
3. சங்கத்தமிழ் - தலைப்புகளின் அகரவரிசைப் பட்டியல் (அகம்)
4. சங்கத்தமிழில் - சங்கப்புலவர்கள் அகரவரிசை.
5. சங்கத்தமிழில் இடம் பெறும் உவமைகள்
6. கலைஞரின் நூல்களின் பட்டியல்
7. நேர் காணல்

பின்னிணைப்புகளும், துணைநூற்பட்டியலும் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது.